**அகுரஸ்ஸ பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 09 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 15 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து அகுரஸ்ஸ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிர்மான வேலைச் செலவு ரூபா 2,171,060 தொகைக்காக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும் | 2020 ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 110,846 தொகைக்கான மீண்டுவரும் செலவுக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொண்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | சேதனப் பசளை செயற்களம் நிர்மானிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 14,247,728 இற்கான செலவு மற்றும் 05 ஏக்கர் அளவை கொண்ட அந்தக் காணியின் பெறுமதியை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) | மீளாய்வாண்டின் போது நூலக அபிவிருத்திக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 848,193 தொகை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 5,239,207 இற்கான ஏற்பாடு மேற்கொண்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஓய்வூதிய திணைக்களத்திலிருந்து தகவல்கள் கோரியுள்ளதுடன் அவை கிடைத்தவுடன் கணக்குகள் சீராக்கல் மேற்கொள்வேன். |

### (ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள கூட்டுத் தொகை ரூபா 116,348,398 தொகைக்கான 09 கணக்கு விடயங்களுக்கு உரிய மீதிகள் மற்றும் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப் பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 57,871,088 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | உரிய மீதிகளில் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய மீதிகள் மற்றும் துணைப் பதிவேட்டு மீதிகள் இடையே வித்தியாசங்களுக்கான காரணங்களை இனங்கண்டு அவற்றை நாட்குறிப்பு மூலம் சரி செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

### (இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 188,113,605 தொகைக்கான 08 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக் களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதி களை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரை யாக்கப்பட்டு பேணப்படு வதற்கும் மற்றும் 10 வருடங்கள் வரை பதிவேடுகள் பரிசோதனை செய்யப்பட்ட போதிலும் அறுதியாக அறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாத கணக்கு விடயங்கள் காணப்படுகின்றன. |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 193 | பாதீட்டு மற்றும் குறை நிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவு களுடன் செலவு விடயங்களின் உண்மையான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்கு களுடன் சமர்ப்பித்திருக்க வில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2020 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 703(1)(ஆ) | சபையில் அலுவலக வளவில் வாகன தரிப்பிடம் நிர்மானிக்கும் ஒப்பந்த வேலை ஒப்பந்தக்கார சங்கத்தினால் உப ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு சாட்டப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணங்களின் படி செயற்படவேண்டும். | எச்சந்தர்ப்பத்திலும் உப ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு ஒப்பந்த வேலையை வழங்குவதற்காக சபை அங்கீகாரம் வழங்கியிருக்கவில்லை. |
| (இ) | பொது நிதி 01/2012 மற்றும் 2012 ஜனவரி 05 ஆந் திகதிய சுற்றறிக்கை | சமூக அடிப்படை அமைப்புக்களுக்கு வேலைகள் மற்றும் ஒப்பந்த வேலைகள் சாட்டுதல் செய்யும் போது தகைமைகளை பரிசோதனை மேற்கொள்ளாமல் நிர்மான வேலைகள் நிறைவேற்றுவதற்காக சங்கங்களுக்கு ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட மற்றும் செயற்படு நிலையில் காணப்பட்ட பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் பெயர் பட்டியலை பெற்று அந்த சமூக அடிப்படை அமைப்புக்களுக்கு மாத்திரம் வேலை / ஒப்பந்த வேலைகள் வழங்குவதற்கு 2020 ஆண்டு முதல் நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

---------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,357,501 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,940,635 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 4,092,000 | 3,802,843 | 4,132,592 | 1,226,921 | 2,012,000 | 2,168,357 | 1,990,568 | 1,556,670 |
| வாடகை | 5,920,550 | 4,585,811 | 4,862,529 | 7,060,819 | 3,600,000 | 3,363,845 | 2,834,789 | 7,337,537 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,495,600 | 1,665,340 | 1,665,340 | -- | 1,875,000 | 1,717,457 | 1,717,457 | -- |
| ஏனைய வருமானங்கள் | 26,302,000 | 22,457,837 | 3,240,603 | 48,075,703 | 16,500,000 | 15,740,689 | 9,145,408 | 28,858,469 |
| மொத்தம் | 37,810,150 | 32,511,831 | 13,901,064 | 56,363,443 | 23,987,000 | 22,990,348 | 15,688,222 | 37,752,676 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| மீளாய்வாண்டிற்கான ஆரம்ப நிலுவை வீத வரி மீதி ரூபா 1,516,613 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 2,130,208 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் மற்றும் மிகைக் கட்டணத்துடன் ரூபா 3,646,821 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 2,466,572 தொகை கொண்டிருந்த மையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,180,249 நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | 2020 ஏப்ரல் மாதம் 30 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை மீதியில் ரூபா 54,114 இற்கான தொகை ஒன்றினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளேன். |
| **(ஆ) ஏக்கர் வரி** | | |
| ஆரம்ப நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 40,057 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 15,535 தொகையுடன் ரூபா 55,592 தொகை அறவிடப்படவேண்டி இருந்தது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 8,920 தொகையாகக் காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 46,672 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | 2019/அ.பி.ச/சபை பிரரேரணை/ 05.03.(i) சபைத் தீர்மானத்தின் நிலுவை ஏக்கர்வரி ஆதனங்கள் தொடர்பாக ரூபா 4,259 தொகையொன்றினை பதிவளிப்பதற்கு சபை தீர்மானித்திருந்தது. அதன் பிரகாரம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் ஏக்கர்வரி தொடர்பாக மீதியாத ஆதனங்களின் நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) கடை வாடகை** | | |
| ஆரம்ப நிலுவை ரூபா 6,703,227 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 2,901,125 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் மற்றும் மிகைக் கட்டணத்துடன் ரூபா 9,604,352 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 2,983,693 தொகையாக காணப்பட்டமையால், மீளாய்வாண்டு இறுதியில் உள்ள வாறு ரூபா 6,620,659 தொகை நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைக் கடை வாடகை செலுத்தத் தவறிய 10 கடைகளுக்காக அவற்றின் உரிமையை உரித்தாக்குவதற்கு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 15 கடைகள் தொடர்பாக உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். |
| **(ஆ) நில வாடகை** | | |
| ஆரம்ப நிலுவை ரூபா 635,195 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 421,616 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் மற்றும் மிகைக் கட்டணத்துடன் ரூபா 1,056,811 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடு கள் ரூபா 616,651 தொகையாக காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 440,160 தொகை நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | சபைக்குச் சொந்தமான நில வாடகை அலகுகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் நில வாடகை பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நில வாடகை அலகுகளை மீண்டும் அளவை செய்து வரைபுகள் தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 2,639,716 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 44,508,569 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பவற்றை வழங்குமாறு கோறியிருந்ததுடன், நிலுவை முத்திரைக் கட்டணத்தில் ரூபா 4,532,716 தொகை ஒன்று 2020 மே 31 ஆந் திகதி வரை கிடைத்திருந்தது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2002 ஆண்டு முதல் துணை விதிகள் ஆக்கப்பட்டு குப்பை வரி அறவீடு செய்வதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் வைத்தியசாலைகள், தொழிற்சாலை கள், வீட்டுத்தொகுதிகள், மாமிச விற்பனை நிலையங்களிலிருந்து சேகரிக்கப்படும் குப்பை எண்ணிக்கையில் ஒன்று அறவீடு செய்வதற்கு 2020 ஜனவரி 31 திகதி வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. | துணை விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | குப்பைகள் குவிக்கும் செயற்களத்தில் சேதனப் பசளை தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டு ள்ளதுடன் 2021 ஆண்டு முதல் குப்பை வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் நாளாந்தம் சேகரமாகும் குப்பை சுமார் 5000 கிலோகிராம் அளவு நகர மத்தியிலுள்ள பெனகாவகொட எனும் சதுப்பு நிலம் ஒன்றில் முறையற்ற விதமாக குவிக்கப்பட்டிருந்தது. | முறைப்பிரகாரம் குப்பை குவித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | நாளாந்தம் சேகரமாகும் குப்பை 2020 மார்ச் 19 வரை பெனகாவகொட எனும் சதுப்பு நிலத்தில் குவிக்கப்பட்ட போதிலும் அத்திகதியில் இருந்து நிர்மானிக்கப்பட்டிருந்த சேதனப் பசளை செயற்களத்திற்கு குப்பை எடுத்துச் செல்லப்பட்டு குப்பை மீள்சுழற்சி அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) சபைக்குச் சொந்தமான பெக்கோ இயந்திரம் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் போது மதிப்பீடுகள் தயாரித்திருக்காததுடன் மயிலோமீற்றரின் ஆரம்ப மற்றும் இறுதி பெறுமதிகள் பொறுப்பு வாய்ந்த அலுவலர் ஒருவரினால் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டின் போது 880.4 மீற்றர் மணித்தியாலங்கள் சேவையில் ஈடுபடுத்தியமைக்காக செலவிடப்பட்ட ரூபா 857,990 இற்கான எரிபொருள் செலவினை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | மதிப்பீடு தயாரிக்கப்பட்டு முறைப்பிரகாரம் அபிவிருத்தி வேலைகளுக்காக பயன்படுத்த வேண்டும். | நாளாந்தம் இயந்திரத்தை ஈடுபடுத்தும் போது ஆரம்ப மயிலோமீற்றர் மற்றும் இறுதி மயிலோமீற்றர் பெறுமதி பொறுப்பு வாய்ந்த அலுவலர் ஒருவரினால் சான்றுபடுத்தப்பட்டிருக்காதுடன் நாளாந்தம் சேவையில் ஈடுபடுத்தும் போது சபைத் தவிசாளரின் அங்கீகாரம் பெற்ற பின்னர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 49 மற்றும் 52 ஆம் பிரிவுகளின் பிரகாரம் 2017 ஆண்டு முதல் 61 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் கண்டறியப்பட்டிருந்ததுடன், அவற்றில் 53 தொகை தொடர்பாக அறிவித்தல் மாத்திரம் வழங்கியிருந்ததுடன் அதற்காக வேலைத்திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அங்கீகாரமற்ற நிர்மான வேலைகளை பரிசோதனை செய்து சட்ட செயற்பாடுகளுக்கு நெருங்குவதற்காக இரண்டு தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு எழுத்து மூலம் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 19 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 02 மிகை பதவியணியினை முறைப்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணியில் மிகை பதவிகளை முறைப்படுத்துவதற்கும் மற்றும் வெற்றிடங்களை நிரப்பப்பட வேண்டும். | சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் கீழ் உட்படுத்தியிருக்காததுடன் 2020 ஜுன் 01 இல் உள்ளவாறு இரண்டாம் நிலை வெற்றிடம் 01 ஏற்பட்டுள்ளது. ஆரம்ப நிலையின் அனைத்து வெற்றிடங்களுக்கும் ஆட்சேர்ப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) சேர்க்கப்பட்டிருந்த சுகாதார மற்றும் பாதைத் தொழிலாளர்களுக்கு கடமை சாட்டுதல்கள் மேற்கொள்ளாமை, பிரதியீட்டு அடிப்படையின் மீது மீண்டும் ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்காக ரூபா 4,631,912 இற்கான மிகைச் செலவொன்று மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தது. | பதவிக்கான கடமை சாட்டப்பட வேண்டும். | வேலை / வெளிக்கள தொழிலாளர் பதவிகள் 03 மற்றும் இரண்டு சுகாதார தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டமை அந்த துறையில் கடமையாற்றுவதற்கு தற்போது இருக்கும் தொழிலாளர்கள் போதிலயளவாக காணப்படாமையால் மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அதிகாரி களிடமிருந்து அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. |

### 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் தபச/அ/5/6/பொது மற்றும் 2010 திசெம்பர் 27 ஆம் திகதி சுற்றறிக்கையின் 05 ஆவது பிரிவின் பிரகாரம் சபைக்கு சொந்தமான 207 கடைகள் தொடர்பான உடன்படிக்கைகள் 3 வருடங்களுக்கு ஒருமுறை நாளது வரை ஆக்கியருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அகுரஸ்ஸ பிரதேச சபைக்கு சொந்தமான 57 கடைகளின் உடன்படிக்கை நாளதுவரை ஆக்கப்பட்டிருந்ததுடன், உடன்படிக்கைகளை நாளதுவரையாக்க நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் தபச/அ/5/6/பொது மற்றும் 2010 திசெம்பர் 27 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்கு சொந்தமான 151 கடைகளின் மாதாந்த வாடகை 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | பொதுச் சந்தையின் கடைகளில் காணப்படும் இடத்ததின் பலவீனம் காரணமாக வாடகையை அதிகரிப்பதற்கு இயலாதுள்ளதால் பெறுமதி மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்படவில்லை. |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குச் சொந்தமான 22 காணிகள் தொடர்பான காணி உரித்துறுதிகளும் 24 காணிகள் தொடர்பான வரைபுகளும் காணப்படவில்லை. | காணி உரித்துறுதிகள் மற்றும் வரைபுகள் தயாரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். | காணி உறுதிகள் மற்றும் வரைபுகள் இல்லாத காணிகளுக்காக உரித்துறுதிகள் மற்றும் வரைபுகள் தயாரிக்க நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) அங்கீகாரம் இன்றி பயன்படுத்தி வரும் சபைக்குச் சொந்தமான 02 ஏக்கர் 20.84 பர்சஸ் இற்கான 09 காணிகள் மற்றும் அளவு பதிவு செய்யப்பட்டிருக்காத 02 காணிகள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேவையான நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட வேண்டும். | அங்கீகாரம் இன்றி பயன்படுத்தப்படும் சபைக்குச் சொந்தமான காணிகள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கு செயற்படுவேன். |